## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 124/2008 | Date : 31.03.2022. | PW2 |
|---|---|---|
| Name: அகத்திய கருணாகரன் | S/o. கணேசன் | |
| Evidence Recorded Time: 12.35 P.M. to 12.40 P.M. | | |

## 4-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-

நான் தற்சமயம் குவாலிட்டி இன்ஜினியராக சென்னையில் பணியாற்றி வருகிறேன். படித்து முடித்து விட்டு தற்போது வேலைக்கு சென்று கொண்டிருக்கிறேன். விபத்தின்போது நான் 6-ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன். எனக்கு இடது கையில் காயம் ஏற்பட்டது. எனக்கு தற்போது எல்லா காயங்களும் சரியாகிவிட்டுது என்றாலும் தற்போது உடல் ரீதியாக எந்த பதிப்பும் இல்லை என்றாலும் வேலைக்கு சென்று வருகிறேன் என்றாலும் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் பள்ளி வாகனத்தில் 15 பேர் சென்றிருந்தோம். நான் படித்த பள்ளியின் பெயர் எம்.ஏ.எம் மெட்ரிகுலேசன் பள்ளியில் படித்தேன். 15 பேர் பள்ளி வாகனத்தில் சென்றதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சம்பத்தன்று அந்த வாகனத்தில் 40 பேர் சென்றதாக மோட்டார் வாகன ஆய்வதிகாரி ஆய்வில் சொல்லியுள்ளார் என்றால் அது தவறாகும். அளவிற்கு அதிகமாக மாணவர்களை ஏற்றிச்சென்றதால் பள்ளி வாகனத்தின் ஓட்டுநர் பைன் கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு நஷ்டஈடு கொடுப்பதாக இருந்தால் 3, 5 எதிர்மனுதாரர்கள்தான் கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றாலும் இந்த 4-வது எதிர்மனுதாரரை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. காப்பீட்டு விதிமுறைகளை மீறி அதிக பயணிகளை ஏற்றிச்சென்றதால் அவ்வாறு ஏற்பட்ட விபத்திற்கு 4-ம் எதிர்மனுதாரர் பொறுப்பல்ல என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்துள்ள மருத்துவபில்கள் அதிக நஷ்டஈடு செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. விபத்து நடந்தபோது காலை 9.20 மணி இருக்கும். விபத்து சமயத்தின் வாகனத்திற்கு இன்சூரன்ஸ் கிடையாது என்றாலும், விபத்து நடந்த பிறகு தான் இன்சூரன்ஸ் புதுப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காலை 9.20 மணிக்கு விபத்து நடந்ததுள்ளது. வண்டியின் உரிமையாளர் பெயர் 11.20 மணிக்குதான் மாற்றப்பட்டுள்ளது என்றும்

அதனால் 4-ம் எதிர்மனுதாரர் பொறுப்பல்ல என்றால் சரியல்ல. 03.12.2007-ம் தேதியில் விபத்து நடந்தது. அந்த சமயத்தில் வாகனத்தின் பாலிசி இரண்டாம் எதிர்மனுதாரர் பெயரிலும் ஆர்.சி புத்தகம் மூன்றாம் எதிர்மனுதாரர் பெயரிலும் இருந்துள்ளது. பள்ளி வாகனத்தின் பதிவு எண் TN 36 F 2892 ஆகும். பாலிசி விதிப்படி அந்த வாகனத்தில் 13 நபர்கள்தான் பயணம் செய்ய வேண்டும் என்றாலும் நான் 15 பேருக்குமேல் சென்றுள்ளதாக சொல்லியுள்ளதாலும் வாகன ஆய்வாளர் 40 நபர்களுக்கு மேல் சென்றுள்ளதாக சொல்லியுள்ளதாலும் தவறான சங்கதிகள் உள்ள என் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. நஷ்ட ஈடு அதிகம் என்றாலும் 4-ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றாலும் சரியல்ல.

ஒம்/-PW2

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.